**<u>O.S.No.345/2010</u>**

**<u>Date:15.11.2018</u>**

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி 4 - கல்லாணை, த-பெ.மூக்கன்</u>**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 2010ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக மூன்று கோவில்களிலும் திருவிழா நடந்தது என்றால் சரிதான். அந்த திருவிழாவின் போது மூன்றாவது மரியாதை யாருக்கு வழங்கப்பட்டது என்றால் என் பெரியப்பாவின் மகன் மாணிக்கத்திற்கு வழங்கப்பட்டது. இந்த வழக்கின் 5, 6 பிரதிவாதிகள் மூன்றாவது மரியாதையில் பங்கு உள்ளதா என்றால் இல்லை. அந்த திருவிழாவின் போது அனைத்து மரியாதைகாரர்களும் கலந்து கொண்டனர் என்றால் சரிதான். கண்மாய் குத்தகைப் பணத்தை வைப்பீடு செய்திருந்த 10 நபர்களில் நானும் ஒருவர் என்றால் சரிதான்.

<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பணம் வைப்பீடு செய்யப்பட்ட 10 நபர்களில் நானும் ஒருவர் என்ற நிலையில் காவல் துறையினர் மிரட்டி என்னை 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கொடுக்கச் சொன்னார்களா என்றால் இல்லை. வாதிகள் அனைவரும் 7ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தேர்தலின் போது வேலை பார்த்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கும் 7ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2010ல் எங்கள் ஊரில் திருவிழா நடந்து 3ம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு 3ம் மரியாதை கொடுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருவிழா நடந்தது என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனாரும், 12ம் பிரதிவாதி அய்யங்காளையின் தகப்பனாரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் 11ம் பிரதிவாதி என்றால் சரிதான். நானும், 12ம் பிரதிவாதியும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் ஒரே பங்காளிகள் என்றால் சரிதான். எனக்கு குல தெய்வம் சின்னயைன் பெரியய்யன் சுவாமி என்றால் சரிதான். இந்த கோவில்கள் திருவாதவூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் சீனி மூப்பனார் என்றால் சரிதான். சீனி மூப்பனார் 1951 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற தலைவராக எங்கள் ஊரில் இருந்தார் என்றால் இருந்திருப்பார், எனக்குத் தெரியாது. எங்கள் ஊரில் உள்ள பாலம் அவர் காலத்தில் கட்டப்பட்டு, அவர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பொன்னாண்டியின் தாத்தா பெயர் என்ன என்றால் தெரியாது. பொன்னாண்டி, வீரணன் பூர்வீகம் எங்கள் ஊர் என்றால் எனக்குத் தெரிந்த அளவில் அங்குதான் இருக்கிறார்கள். நான் எங்கள் ஊரில் வசிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த

வழக்கின் வாதிகள் என்னை விட வயதில் மூத்தவர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு ஊரில் உள்ள மரியாதை குறித்த விபரங்கள் நன்றாக தெரியும் என்றால் சரிதான். வாதிகளை விசாரித்த போது, 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மூன்றாம் மரியாதை கிடைக்கத்தக்கது என்று சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் தெரியாது. எனக்கு எந்த மரியாதை பாத்தியம் என்றால் மூன்றாம் மரியாதை பாத்தியம் ஆகும். அதற்கு பட்டயம், ஆவணம் எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆவணம் வாதிகள்தான் தாக்கல் செய்துள்ளனர் என்றாலும், நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். அந்த வழக்கில் நானோ, என் முன்னோர்களோ தரப்பினர் இல்லை என்றால் என் முன்னோர்கள் இருக்கிறார்கள். மூன்றாவது மரியாதை 5 மற்றும் 6வது பிரதிவாதிகளுக்குப் பாத்தியம் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சக்திவேல் மகன் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு எதிராக 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தேர்தல் வேலை பார்த்ததால் ஏற்பட்ட விரோதத்தின் அடிப்படையில்நான் மனசாட்சி இல்லாமல் 3ம் மரியாதை 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கின் விபரம் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்த வழக்கின் ஆரம்பத்தில் தோன்றாத் தரப்பினர் ஆகிவிட்டனர் என்றால் சரிதான். எனவேதான் நான் இந்த வழக்கின் தரப்பினராக வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்தவழக்கு நடந்த விபரம் எனக்கு 2010ல் தெரியும் என்றால் தெரியாது. ஊர் மரியாதை பற்றிய விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்து கொண்டே 2010ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சாமி கும்பிடுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொன்னார்கள். ஊரில் சாமி கும்பிடுவது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான், ஆனால் 5 மற்றும்6 பிரதிவாதிகள் இல்லாமல் சாமி கும்பிட வேண்டும். எத்தனை வருடமாக 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மரியாதை இல்லை என்று பிரச்சனை உள்ளது என்றால் 1987 முதல் பிரச்சனை உள்ளது. இதுவரை நான் எதுவும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. 1987 முதல் எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும், சக்திவேல் மகன் தேர்தலில் நின்று ஏற்பட்ட தேர்தல் பிரச்சனை காரணமாக, ஊரில் உள்ள வாதிகள் பெரும் பகுதி 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மூன்றாவது மரியாதை உள்ளதாக ஒப்புக் கொண்டதாக உள்ள சூழ்நிலையில், நான் வேண்டுமென்றே ஒட்டு மொத்த ஊர்மக்கள் எண்ணத்திற்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(7ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆறு வகை மரியாதைகாரர்களும், ஊர் பொதுமக்களும் சேர்ந்த ஒற்றுமையாக சாமீ கும்பிடுவதில் ஆட்சேபணை உள்ளதா என்றர்ல இல்லை. கிராமத்திற்கு வருமானம் என்பது எங்கள் ஊரில் உள்ள பெரிய கண்மாய், மீன் பிடி குத்தகை மற்றும் கடை வருமானம்தான் என்றால் சரிதான். 5,

6 பிரதிவாதிகள் பெரியசம்சாரி கோடாங்கிபிடாரன் வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் ஊருக்கு வடக்கே உள்ள பெரியசம்சாரி கோடாங்கிபிடாரன் மரியாதைதான் அவர்களுக்கு உள்ளது என்றால் சரிதான்.